செ.வெ.எண்: 54 நாள்:23.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய பேருந்து வழித்தடத்தினை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் துவக்கி வைத்தார்கள்.

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளத்தில் தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் சார்பில் சென்னைக்கு புதிய பேருந்து வழிதடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் 22.09.2016 அன்று துவக்கி வைத்தார்கள்.

இந்த புதிய பேருந்து வழித்தடத்தினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் துவக்கி வைத்து பேசியதாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். இதன்படி தமிழகஅரசு அனைத்து பொதுமக்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு தங்கு தடையின்றி சென்று வரும் வகையில் புதிய பேருந்து வழித்தடங்களை துவக்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் அரிமளம் எட்டாம் மண்டகப்படியிலிருந்து சென்னைக்கு புதிய பேருந்து வழித்தடம் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த மிதவைப்பேருந்து தினமும் அரிமளம் எட்டாம் மண்டகப்படியிலிருந்து இரவு 9 மணிக்கு புறப்பட்டு புதுக்கோட்டை, திருச்சி வழியாக சென்னையை சென்றடையும். இதே போன்று மற்றொரு பேருந்து தினமும் சென்னை கோயம்பேட்டிலிருந்து இரவு 9.30 மணிக்கு புறப்பட்டு திருச்சி, புதுக்கோட்டை வழியாக அரிமளத்தை வந்தடையும். இதில் சென்னை செல்வதற்கு ஒரு நபருக்கு ரூ.285 கட்டணம் வசூலிக்கப்படும். இப்பகுதி பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்து தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் அவர்கள் இப்பேருந்து வசதியை பெற்றுக்கொடுத்துள்ளார்கள். இதன் மூலம் இப்பகுதியை சேர்ந்த அனைத்து தரப்பினரும் மிகுந்த பயன்பெறுவார்கள். எனவே தமிழகஅரசின் இத்தகைய திட்டங்களை பொதுமக்கள் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.



புதுக்கோட்டை மாவட்டம், அரிமளத்தில் தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் சார்பில் சென்னைக்கு புதிய பேருந்து வழிதடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் 22.09.2016 அன்று துவக்கி வைத்தார்கள். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம் அவர்கள் மற்றும் பலர் உள்ளனர்

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, அரிமளம் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.எம்.எம்.கணேசன், நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், அரிமளம் பேரூராட்சித்தலைவர் திரு.மாரியப்பன், ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.திலகர், மாவட்ட ஊராட்சிக்குழு துணைத்தலைவர் திரு.சந்திரன், முன்னாள் அமைச்சர் திரு.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு அரசு விரைவுப்போக்குவரத்துக்கழக காரைக்குடி பணிமனை கோட்ட மேலாளர் திரு.கேசவன், கிளை மேலாளர் திரு.நேரு, புதுக்கோட்டை மண்டல துணை மேலாளர் திரு.பாலசுப்பிரமணியன் (தொழில்நுட்பம்), உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**